DB14-2-3-TA

# உங்கள் விசுவாசத்தை குறித்து உலகத்தால் கேட்கப்படும் கேள்விகள் - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்**: ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில் இன்று, உயர்நிலை பள்ளியில் இருக்கும் போது தவறாமல் சபைக்கு சென்றுகொண்டிருந்த கிறிஸ்தவ வாலிபர்களில் 70% கல்லூரி மற்றும் பல்கலைகழகங்களில் சேர்ந்தவுடன் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தைவிட்டு பின்னடைவை சந்திக்கின்றனர் என்று புள்ளிவிபரம் கூறுகிறது. அவர்கள் வளர்க்கப்பட்ட அந்த விசுவாசத்தை விட்டு அவர்கள் பின் வாங்க காரணம் என்ன? பல்கலைகழகத்தில் இணையும் மாணவர்கள் இன்னி அவர்கள் ஞாயிறு பள்ளியில் இருக்க அவசியமில்லை என நினைக்கின்றனர். மதசார்பற்ற பேராசிரியர்கள் கிறிஸ்தவம் எப்படி துவங்கியது என்ற கேள்வியை அவர்கள் முன் வைக்கிறார்கள். இயேசு யார். அவர் மரணத்திலிருந்து உயிர்த்தார் என்று நம்பமுடியுமா? வேதம் நமக்கு எப்படி கிடைத்தது, அதில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்கள் அனைத்தையும் முழுமையாக நம்பலாமா?

32% கிறிஸ்தவ மாணவர்கள் தங்களுக்கு சமய நம்பிக்கையை குறித்த சந்தேகங்களினால் பின்மாற்றமடைந்ததாக சொல்கிறார்கள். அவர்களுடைய விசுவாசத்திற்கு எந்த அர்த்தமும் இல்லாமல் போயிற்று, பதிலளிக்க முடியாது என்று தோன்றும் வகையில் பல கேள்விகள் அவர்கள் முன்பாக இருப்பதுபோல நினைத்தார்கள்.

63% கிறிஸ்தவ இளைஞர்கள் இயேசுதான் உண்மையான தேவனுடைய ஒரே குமாரன் என்பதை விசுவாசிக்கவில்லை என்கின்றனர்.

51% இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை நம்பவில்லை என்கின்றனர்.

68% பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தில் ஒருவர் என்பதை நம்புவதில்லை என்கின்றனர்.

33 % மட்டுமே வீட்திற்கு அடுத்தபடியாக சபைதான் தங்கள் வாழ்வில் பெரும்பங்காற்றுகிறது என்கின்றனர்.

ஆனா இந்த நிலையை மாற்றியமைக்க முடியும் என்று நம்புகிறேன். நான் நம்பிகொண்டிருந்த அனைத்தும் சவாலிடப்பட்ட என் கல்லூரியின் முதல் நாள் இன்னும் என் நினைவில் இருக்கிறது. எனவே நமது இந்த செய்திதொடருக்கு நான் வைத்திருக்கும்

தலைப்பு “நம்முடைய மகன் மற்றும் மகள் கல்லூரிக்குள் நுழைவதற்கு முன்பு அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் என்ன, அவர்கள் தங்கள் விசுவாசத்தில் இடறாமல் இருக்க வேண்டும்” இந்த செய்தியானது மாணவர்களுக்கு மட்டும் என்றில்லை, கிறிஸ்துவை அறியாதவர்களோடு பணிபுரியும் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும்.

இந்த காரியங்களை நம்மோடு பகிர்ந்துகொள்ள இருக்கும் இன்றைய விருந்தினர் Dr. டேரல் பாக், நமது தேசத்தில் இருக்கும் வரலாற்று இயேசுவை பற்றி எடுத்துசொல்லும் வல்லுனர்களில் ஒருவர், லூக்கா சுவிசேஷம் மற்று அப்போஸ்தலர் இரண்டையும் விளக்கும் உலக பிரசித்திபெற்ற நபராகவும் இருக்கிறார். இவர் புதிய ஏற்பாடு பற்றிய ஆராய்ச்சிகளில் முதன்மை பேராசிரியராக டாலாஸ் தியோலஜிகள் செமினரியில் பணிபுரிகிறார், சுமார் 30 புத்தகங்களை எழுதி பல தொலைக்காட்சி பேட்டிகளில் பங்குபெற்றிருக்கிறார் ABC, CNN, Fox மற்றும் டிஸ்கவரி சேனல்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நாம் பார்த்துக்கொண்டிருப்பது உங்கள் மாணவர்கள், உங்கள் மகன், உங்கள் மகள், கல்லூரி பல்கலை கழகத்திற்குள் நுழையும்போது, இயேசுவை பற்றி அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்படுவது என்ன, தேவன் வேதாகமத்தை பற்றி கேட்பது என்ன? இன்றைக்கு மிக சுவாரஸ்யமான கேள்வியை பற்றி பார்க்க இருக்கிறோம். இயேசு சிலுவையில் அறையப்பட்டதையும் அடக்கம் பன்னம்பட்டதையும் எருசலேமின் மக்கள் பார்த்தனர் அதன்பிறகு அவர் சரீரத்திற்கு சம்பவித்தது என்ன? இதை கற்பனை செய்து பாருங்கள்: இந்த ஜனங்கள் இயேசுவின் சிலுவை பாடுகளை கண்டிருந்தனர், அவர் செய்தவைகளை கேள்விப்பட்டிருந்தனர், மூன்று வருடங்களாக அவர் செய்த அர்ப்புதங்களையும் அவரை பற்றியும் அவர்கள் கேள்விப்பட்டு அறிந்திருந்தனர். இப்போது அவர் சிலுவையில் தொங்கி மரித்துவிட்டார், அவருடைய விழாவில் ஈட்டி பாய்ந்தது, அவரை கீழே இறக்கி அடக்கம் செய்தனர்.

இப்ப மூன்று நாட்களுக்கு பிறகு, ஞாயிறு காலையில் – வெள்ளிக்கிழமை இரவிலிருந்து ஞாயிறு காலை வரை , ஓகே – திடீரென்று ஒரு புரளி கிளன்புகிறது சீஷர்கள் இயேசுவை உயிரோடு பார்த்தனர். அவர்கள், “கம் ஆன்” ஒருவேளை எருசலேமில் கூடியிருந்தவர்களில் நீங்களும் ஒருவராக இருந்தால், இயேசு அடக்கம் பண்ணப்பட்டார் என்று தெரியும், இயேசு மரணத்திலிருந்து உயிர்த்து சீஷர்களுக்கு தோன்றினார் என்பதை நீங்கள் நம்பாமல் இருக்கலாம், அப்படிப்பட்ட நிலையில் என்ன செய்வீர்கள்? நீங்கள் ஒருவேளை சொல்லலாம், “கல்லறைக்கு போகலாம். அந்த சரீரம் இன்னும் அங்கே இருக்கிறதா என்று பார்க்கலாம் என்பீர்கள்.”

டேரல், இயேசுவின் சரீரத்திற்கு என்ன நடந்தது என்பதை பார்க்கும்போது, அவர் நல்ல விதமாகத்தான் அடக்கம் பண்ணப்பட்டார், அவரை கல்லறையில் வைத்தார்கள்,

மூன்றாவது நாளில் சீஷர்கள் அவர் உயிர்த்தார் என்றும் அவரை தாங்கள் கண்டதாகவும் கூறுகின்றனர்.அவர் அவர்களுக்கு தரிசனமானார்; அவர் பலவிதமான மக்களுக்கு நாற்பது நாளளவும் தரிசனமானார். இப்படி ஒன்று சம்பவிக்கவே இல்லை என்று நாத்திகர்கள் சொல்லும்போது, இந்த காலியான கல்லறையை பற்றி அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

**Dr. டேரல் பாக்:** சரி, அவங்க என்ன சொல்றாங்கன்னா சீஷர்களுக்கு ஒருவிதமான அனுபவம் உண்டானது அதன் விளைவாக தான் அவர்களுடைய மனதில் இயேசுவிற்கு அதிசயமான காரியம் நடந்திருக்கிறது என்று நினைத்தனர். இது அப்படியே தொடர்ந்து வந்து அது ஒரு பிரம்மை என்ற நிலைக்கு வந்தது, அல்லது அதுவொரு உளவியல் தூண்டல், சுய எண்ணம், என்பது போல கருதப்பட்டது. இதில் சுவாரஸ்யமான விஷயம் என்னன்னா சீஷர்களின் மாற்றமும் கிறிஸ்தவ அமைப்பின் தாக்கமும் அதாவது அவர்கள் விசுவாசித்த விஷயத்திற்காக மரிக்கவும் அவர்கள் ஆயத்தமாக இருந்தார்கள் என்ற காரியம் நிச்சயம் அவர்கள் பயந்த நிலையிலிருந்து இந்த தைரியத்தை பெறுவதற்கு ஏதோவொரு சம்பவம் அனுபவம் அவர்களுக்கு உண்டாயிருக்க வேண்டும் என்று நம்பினார்கள். அதனால, ஏதோவொன்று நிச்சயம் நடந்திருக்க வேண்டும். இது உங்களுக்கு 2 வாய்ப்புகள் இருக்கிறது: உயிர்த்தெழுதல் நடந்திருக்க வேண்டும், அல்லது ஒரு குழுவான சமுதாயத்திர்னருக்கு ஒரேவிதமான பிரம்மை சுய எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். இந்த விஷயத்தில் ஏற்றுக்கொள்ள கடினமாக இருக்கும் காரியம் என்னவென்றால்: ஒரு நபர் இந்த பயத்திலிருந்து வெளியேவந்து இந்த மாதிரியான அனுபவத்தை பெற்றார் என்பதை நம்பலாம், அதற்காக எல்லாருக்கும் இதே அனுபவம் ஏற்பட்டது என்பது சாத்தியமல்ல. அப்படின்னா ஒரேசமயத்தில் பலருக்கு உண்டான ஒரே அனுபவம் என்று சொன்னால் அது நிச்சயம் உயிர்த்தெழுதலாக தான் இருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இப்ப வகுப்பறைகளில் பர்க்கிற ஒருவிஷயம் இருக்கிறது, காலியான கல்லறையை அவர்கள் ஒப்புக்கொண்டால், அதற்க்கான காரங்களையும் முன்வைத்திடுவார்கள். அதற்க்கான காரணங்கள் அவர்களிடம் இருக்கிறது. அதாவது, இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்றும் சீஷர்களுக்கு காட்சியளித்தார் என்பதையும் ஒப்புக்கொள்ளாவிட்டால், காலியான கல்லறை எப்படி வந்திருக்கும்? ஆல்ரைட், பிரபலமான ஒரு கூற்று அவர்கள் இயேசுவின் சரீரத்தை திருடிச் சென்றனர். இங்க நடக்கிற தவறு என்ன?

**Dr. டேரல் பாக்:** அது திருடப்பட்டது என்று சொல்லும்போது அது காவலர்களின் தடைகளைத்தாண்டி நடந்திருக்க வேண்டும், அதை யார் திருடினார்கள் என்பது அவசியம், எங்கு கொண்டு சென்றார்கள், எதற்காக அப்படி செய்தார்கள்? சீஷர்கள் அவர் சரீரத்தை திருடியிருப்பார்கள் என்று சொல்வதில் எந்தவித அர்த்தமும் கிடையாது. ஏன்னா அவங்க சாகவும் தயாராக இருந்தார்கள், சரி, “நாங்க சரீரத்தை திருடிவிட்டோம், அந்த சரீரத்தை திருடி அதை ஒப்புக்கொள்ளாததால் நாங்கள் சாகிறோம்.” இதுல எந்த அர்த்தமும் இல்ல, சரீரம் திருடப்பட்டது என்ற கருத்தில் பலவிதமான பிரச்சனைகள் இருக்கிறது என்பதுதான் உண்மை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், நீங்க இயேசுவை பற்றி ABC, NBC,CBS special ல பேசியிருக்கீங்க. கொஞ்ச நாட்களுக்கு முன்பு நாம் காலிபாட் கல்லறையை பற்றி பார்த்தோம், இயேசுவின் குடும்ப கல்லறை, அதுலதான், அதாவது இயேசுவை அதில்தான் அவர்கள் அடக்கம் செய்திருக்க வேண்டும். அவர்கள் இன்னும் சரீரத்தை தேடிக்கொண்டிருப்பதாக சில வதந்திகள் இருக்கிறது. .

**Dr. டேரல் பாக்:** உண்மைதான். அதோடு இந்த குடும்ப கல்லறைய பற்றி சொல்லும்போது, இயேசுவை குடும்ப கல்லறையில் அடக்கம் செய்திருக்க முடியாது, ஏன்னா யூத சட்டத்தின்படி குற்றவாளிகளை குடும்ப கல்லறைகளில் அடக்கம் செய்யக்கூடாது. அடக்கத்தில் இந்த சட்டம் வலிமையாக இருக்கிறது. எனவே, அப்படிபார்க்கும்போது இயேசு நல்லவிதமாம அடக்கம் பண்ணப்படுகிறார் அவர் இளைப்பாற ஒரு இடம் இருந்தது. அவரை அப்படியே தூக்கி எறிதிடவில்லை. ஒருவிதத்தில் அது கனவீனத்திற்குரியது தான், ஏனென்றால் அவர் மற்றவர்களை போல அவரது குடும்ப கல்லறையில் அடக்கம் பண்ணப்படவில்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, ஆனா, அதாவது, பொதுவாக பார்க்கும்போது இன்றைக்கும் அவருடைய சரீரத்தை தேடிக்கொண்டிருக்கிறார்களே.

**Dr. டேரல் பாக்:** ஓ, ஆமா! தேடீட்டே இருக்கட்டுமே (சிரிப்பு)

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. மாணவர்களுக்கு சொல்லக்கூடிய மற்றொரு விதம் ஏனன்னா காலியான கல்லறையை பற்றி சொல்லும்போது சீஷர்கள் சொன்ன காரியத்தை முன்வைத்திடலாம், “அவர் உயிர்த்தெழுந்தார் உயிர்த்தெழுந்த அவரை நாங்கள் கண்டோம்.”

**Dr. டேரல் பாக்:** சரி, இது முக்கியமான ஒன்று என நினைக்கிறேன், இங்க ஒரு காரியத்தை சுட்டி காட்ட விரும்புகிறேன், ஏன்னா இந்த காரியங்களை காண்பிப்பதற்கு விமர்சகர்கள் பெரும்பாலும் பயன்படுத்துவது முதலாவதாக எழுதப்பட்ட சுவிஷேஷம்தான், சரியாக சொன்னால், மாற்கு. மாற்கு, இதுதான், குறுகிய தீர்வு என்று சொல்லப்படும் முடிவுடன் இருக்கிறது 16:8; மாற்கு முடிவடைவத்தை பற்றி பல விவாதங்கள் நடந்து வருகிறது. கல்லறை காலியாக இருக்கிறதென்று பெண்களுக்கு சொல்லப்பட்டது அவர்கள் திகிலும் நடுக்கமும் அடைந்தனர் என்று சொல்கிறது. மலை ஏறுபவர்களை பற்றி முதலில் சொன்னது ஹாலிவுட் மக்கள் கிடையாது, அதாவது, மாற்கு அப்படிதான் செய்திருக்கிறார். அவர் உயிர்த்தெழுதலை அறிவிக்கிறார், மேலும் இப்படி ஒரு உணர்வுடன்தான் தனது சுவிசேஷத்தை முடிக்கிறார், ஆல்ரைட், இதை பற்றி நீங்க என்ன சொல்றீங்க? காலியான கல்லறை, சரீரத்தை கண்டுபிடிக்க முடியவில்லை, இதை பற்றி நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்?

இதற்கு என்ன அர்த்தம் என்றால், தரிசனமானார் என்பதற்கு சாட்சியில்லை, மத்தேயு மாற்கு யோவானில் சொல்லப்பட்டது போல சீஷர்களுக்கு காலியான கல்லறையின் செய்தி சென்றடையவில்லை. அதனால, நாத்திகர்கள் என்ன சொல்வாங்கன்னா, “இந்த, காலியான கல்லறையை பற்றி சீஷர்களுக்கு அறிவிக்கப்பட்டதேன்பது கட்டுக்கதை. உயிரோடு தோன்றினார் எனபது கட்டுக்கதை. பிற்காலத்தில் தோன்றியது என்றிடுவர்.” நாம பார்த்துக்கொண்டிருக்கும் இந்த இடைப்பட்ட காலத்தில் உண்டானவை

என்றிடுவார்கள். இப்படி சொல்லி காலியான கல்லறை என்பதை தகர்த்திடுவார்கள். காலியான கல்லறையின் பிரச்சனை என்னன்னா, எருசலேமில் நடக்கும் எல்லா பிரசங்கங்களிலும் காலியான கல்லறை என்ற அனுமானம் இருப்பது வழக்கம். அதனால் காலியான கல்லறையை தாண்டி எதையும் சொல்ல முடியாது. அதனால், காலியான கல்லறை என்ற கலாச்சாரத்தை சொல்ல மத்தேயு மாற்கு லூக்கா யோவான் அப்போஸ்தலர்கள் தேவையில்லை. ஆதிதிருச்சபைகளின் பிரசங்கமே அதை முன்வைக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, டேரல், சுவிசேஷங்கள் எழுதப்படுவதற்கு முன்பே கி பி 55ல் பவுல் வருகிறார், கொரிந்துவில் இருக்கிறவர்களிடம் பேசுகிறார், அங்கு தனது புத்தகங்களை எழுதுகிறார். அவர் அவர்களிடம் கிபி 50ல் போதித்திருக்கிறார். அவர் அவர்களிடம் இந்த சம்பவங்கள் நடந்த அந்த காலத்தை பற்றி சொல்லியிருக்கிறார். அவர் அவர்களிடம், "நான் அடைந்ததும் உங்களுக்கு பிரதானமாய் ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயித்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு 500 பேருக்கும் பின்பு யாக்கோபுக்கும் கடைசியாக பவுலுக்கும் தரிசனமானார். நான் சொல்ல வருவது என்னவென்றால் அவர் அடக்கம் பண்ணப்பட்டார் அவர் உயிர்த்தெழுந்தார். அப்படி அவர் உயிர்த்தெழுந்திருந்தால், காலியான கல்லறைதான் இருக்கும். அது உண்மையல்ல என்று அவரால் சொல்ல முடியவில்லை.

**Dr. டேரல் பாக்:** அவருடைய சரீரம் கல்லறையில் இருந்திருந்தால், அவர் எப்படி சீஷர்களுக்கு தரிசனமாகியிருப்பார்? அதாவது, அதை பற்றிதான் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர், உயிர்த்தெழுந்து அவர்களுக்கு தரிசனமானார். அவர் சரீர பிரகாரமாகதான் தரிசனமானார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது சொப்பனம் அல்ல. ஜனங்களுடைய உள்ளார்ந்த னத்தில் தோன்றிய சம்பவங்கள் கிடையாது. அவர் சாப்பிடுவதைபோன்ற சில காரியங்கள் எடுத்து சொல்லப்பட்டிருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இந்த காரியத்தை இப்போது பார்க்கலாம். உங்களுக்கு சொப்பனம் அல்லது பிரம்மை உண்டானது. ஓகே. இவை இரண்டிற்கும் சிறிய வித்தியாசம் இருக்கிறது. அது எப்படிப்பட்ட உயிர்த்தெழுதல் என்பது போன்ற கேள்விகள் இருக்கிறதே? அது ஆவிகுரியதா, அல்லது, மான்சீகமானதா, சரீர உயிர்த்தேழுதலா? முதல் காரியத்தை இப்போது பார்க்கலாம். ஏன் இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்ற காரியம் சீஷர்களின் பிரம்மையினால் உண்டானது என்று எண்ணத்தின் படி பார்க்ககூடாது?

**Dr. டேரல் பாக்:** சரி, அது ஒரு பிரம்மை என்று சொல்வோமானால் அது பலவிதமான விவாதங்களுக்கு வழிவகுப்பதாயிரும், 1 கொரிந்தியரில் சொலப்பட்டதை ஜாக்கிரதையுடன் பார்ப்போம் என்றால்: ஒரேசமயத்தில் 500 பேர், அவர் பன்னிருவருக்கும் தரிசனமானார், என்பதை பற்றி பார்க்கிறோம். இவை ஒரு குழுவினருக்கு உண்டாகும் பிரம்மை. சரி, பொதுவாக பார்க்கும்போது, ஒரு காரியத்தை

பற்றி பேசும்போது தவிர ஒரு கூட்டத்தினருக்கு பிரம்மை உண்டாவது சாத்தியமல்ல. (சிரிப்பு)

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அது முரட்டுதனமானதாக தெரிகிறது. நீங்க ஒரு இடத்திற்கு போவதுபோன்ற சொப்பனங்கள் வந்தால், நீங்க விழித்தெழுந்து உங்க மனைவியை பார்த்து, "நீயும் என்னோட கனவுல சேர்ந்துக்கோ" என்று சொல்லி ஒருவருடைய சொப்பனத்தில் இருவர் பிரயாணிக்க முடியாது.

வித்தியாசமானவற்றைதான் பார்ப்பீர்கள்.

**Dr. டேரல் பாக்:** அதுதான் சரி. அதோடு, 3வது சீனை கட் பண்ணலாம், என்பதெல்லாம் அதில் கிடையாது.

பிரம்மை உண்டானது என்று சொல்வதில் பிரச்சனை இருக்கிறது என்னென்றால் நாம் பார்க்கிற இந்த கூட்டத்தின் சாட்சிகளில் பல பகுதிகள் இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, சரிதான். இந்த காரியத்தை பார்த்திடலாம், அதாவது 2 வகையான தரிசனங்கள் இருக்கிறது.

**Dr. டேரல் பாக்:** ஆமா, பொதுவாக தரிசனம் பார்க்கிறவர்களின் விளக்கங்கள் உளவியல் தொடர்புடையதாக இருக்கும். எனவே அவர்கள் தரிசனம் பார்த்தனர் என்பது, அவர்களுக்கு உணர்வுண்டாயிற்று, முன்னுனர்வுண்டாயிற்று, இயேசு மறித்தும் ஜீவிக்கிறார் என்ற உணர்வு. அதாவது, எனக்கு இந்த அனுபவம் உண்டு. ஏன்னா என்னுடைய தாயார் தன இளவயதில் மரணமடைந்தார்கள். இருந்தாலும் அவர்கள் மரித்த போதிலும் என்னோடு இருப்பது போன்ற ஒரு உணர்வு எனக்கு இருந்து, அவங்க சத்தத்தை உணர்ந்திருக்கிறேன், இதுபோன்ற அனுபவமுண்டு. இந்த மாதிரியான அனுபவம்தான் அவர்களுக்கும் உண்டாயிருந்ததேன்று நாத்திகர்கள் கூறுகின்றனர். மேலும், நான் சொன்னதுபோல, எனக்கு இப்படியிருந்தது, நாமும் என்னுடைய சகோதரியும் இந்த மாதிரியான அனுபவங்களை பற்றி பேசியிருக்கிறோம்.

அவை வேதனை அளிக்ககூடியவை, ஆனாலும் அவை , உங்கள் வாழ்வில் அதிக ஆதிக்கும் உடைய ஒருவர் இருக்கிறார் என்பதை எடுத்து சொல்கிறதென்று நான் நினைக்கிறேன். இதுவே, என்னுடைய தெருமுனையில் இருக்கும் நபருக்காக எனக்கு அந்த உணர்வு வருவதில்லை. இவங்க, என்னோட அம்மா. நான் யாரோட அதிக நேரத்தை செலவிட்டு அவங்கள மிஸ் பண்றானோ அப்பதா இந்த மாதிரியான உணர்வு ஏற்படும். ஆனா, இங்க, ஒரு கூட்டத்தினருக்கு அந்த ஔணர்வு உண்டாது அது அனுபவம் இல்லை. நான் சொல்லுகிற இந்த அனுபவம் அசாதாரனமாது கிடையாது. எல்லாருக்கும் ஏற்ப்படும். இருப்பது போல தோன்றுகிற உணர்வு பொதுவாக எல்லாருக்கும் ஏற்ப்படும். நாம் இந்து பார்ப்பது அந்த உணர்வு கிடையாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதை நம்மால் நிரூபிக்க முடியும். உண்மையில், பெரும்பாலான நாத்திகர்கள் எல்லா அப்போஸ்தலர்களும், இயேசுவை பார்த்த எல்லாரும்

வருத்தப்பட்டதாக கூறுகின்றனர். அந்த வருத்தத்தின் உணர்வுதான் எல்லாருக்கும் ஒரே விதமான தரிசனத்தை உண்டாக்கியுள்ளது என்கின்றனர்.

**Dr. டேரல் பாக்:** ஆ சரிதான் ஆனா!

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆனா அப்போஸ்தலனாகிய பவுல், இதை எழுதியவர் இவர்தான், வேறுவிதமான கோணத்தில் இருக்கிறது. எப்படியாது?

**Dr. டேரல் பாக்:** அவன் வருத்தப்படவே இல்லை. சபையை கிடிக்கு பிடியாக பிடித்தான். சபையோடு யுத்தம் செய்துகொண்டிருந்தான். சபையை துன்பப்படுத்திக்கொண்டிருந்தான். இயேசு மரித்துவிட்டார் என்பதை அவன் ஏற்றுக்கொண்டிருந்தான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** கிறிஸ்தவர்களை கொலைசெய்வதில் அவன் சந்தோஷமடைந்தான்.

**Dr. டேரல் பாக்:** சரியா சொன்னீங்க. முன்னுதாரணத்திற்கு இவர் எந்தவிதத்திலும் பொருந்துவதில்லை. அதாவது, பவுலை இதில் குறிப்பிட்டு சொல்வதற்கு பல முக்கிய காரணங்கள் இருக்கிறது, ஏனென்றால் ஒரு பக்கத்தில் பல காரியங்கள் நடந்திருந்தாலும், இவருக்கு தான் ஒரு பெரிய திருப்புமுனை உண்டாயிருந்தது. இன்றைக்கு நம்மிடம் இருக்கும் இறையியலின் வெளிப்பாடுகளை கொண்டிருக்கும் புதிய ஏற்ப்பாட்டின் பெரும்பகுதியை எழுதியவர் இவர்தான். இந்த எல்லா நிகழ்வுகளின் பாதைகளிலும் இவர் இருந்திருக்கிறார், சுவிசேஷத்தை பல தேசங்களுக்கு கொண்டு சென்றவர்களில் இவர் பெரும்பங்கு வகிக்கிறார். எனவே இதில் பவுல் மிகவும் முக்கியமானவர், பிரசங்கத்தை நிருபிப்பதற்கு இவரே பெரிய எதிர்ப்பார்ப்பாக இருந்தார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, அதிக நெருக்கமானவர்கள் என்று சொல்லும்போது முதலாவது இயேசுவின் சகோதரன், யாக்கோபு, இயேசு வாழ்ந்த காலத்தில் அவரை ஒருபோதும் நம்பாதவர். எனவே, உங்களுடைய சகோதரன் தேவன் என்பதை எப்படி மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி செய்வீர்கள்?

**Dr. டேரல் பாக்:** ஆமா, இது அருமையான ஒன்றுதான். அதோடு, அதை பற்றி நீங்கள் யோசித்து பாருங்கள், பன்னிரண்டு பேரும் ஒன்றாக கூடிவந்தனர் என்ற கருத்து, இது ஒருவேளை கற்பனையாக இருந்தால் – யாரும் யாருக்கும் அதாவது – ஆதிதிருச்சபையினருக்கு உண்டான அழுத்தங்கள் இருந்திருக்காது – இருந்திருக்காது, அதாவது, உடைக்கப்பட்டு அதை அறிக்கை செய்ய அவர்கள் தயங்கவோ வருந்தவோ இல்லை. உயிர்த்தெழுதலுக்கு சிறந்த விளக்கமளிக்க கூடிய பல காரியங்கள் இருக்கிறது. அதோடு, சிலரை குறித்து நான் பரிதபிக்கிறேன் அவர்கள், "பொதுவாக அற்ப்புதங்கள் நிகழ்வதில்லை என்கின்றனர். இது விதிமுறைகளுக்கு விளக்கப்பட்டது. இது வரலாற்றின் சாதாரண சாத்தியகூறுகள் அல்ல என்கின்றனர்." அதைதான் சொல்கிறார்கள். ஆனா புதிய ஏற்ப்பாடு இந்த காரியங்களில் தெளிவாக இருக்கிறது என்று சொல்லுவேன். இதில் வெளிப்படும் ஒரு காரியம் என்னவென்றால் இந்த காரியங்கள் முதலாவது அறிவிக்கப்பட்டதை பார்த்தால், ஏதோ தலைவர்கள், சபை தலைவர்கள், எழும்பி சொன்னது போல தெரியவில்லை, "ஊ, ஆமா, அது இயேசுதான், நமக்கு அவரை

தெரிந்திருக்கும்" அதாவது, அவர்களுடைய மாறுத்தரம்... அவர்கள் முழுமையான நவீனகால உலகத்தினர், என்றிடுவேன். ஒரு ஸ்திரீ எழும்பி காலியான கல்லறையை பற்றி சொன்னபோது, அவர்கள் சென்றனர், "ஆனா அந்த நாட்களில் அது ரொம்பவும் கடினமானது. இது சிலுவையில் அறையப்பட்டதை பார்த்ததன் பாதிப்பு என்பார்கள்," அதனால் அவர்களுடைய பதில் சந்தேகத்தோடு இருந்தது. தோமா, "அந்த காயங்களில் என் கரத்தை போட்டால் ஒழிய நம்பமாட்டேன் என்றான்." அவர்கள் சந்தேகிக்கும் சூழ்நிலையில் இருந்தார்கள், ஏதோவொரு விஷயம் அவர்கள் அந்த சந்தேகத்தை மேற்க்கொள்ள செய்தது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, உங்கள் பள்ளிகளில் இருக்கும் பேராசிரியர்கள் ஒருவேளை, "ஓ, இது சீஷர்களுடைய கட்டுக்கதை. இது ஒரு கதைதான். டேரல் பல சிறந்த உதாரணங்களை சொல்லலாம், அது, முதல் நூற்றாண்டை பற்றி விளம்பரப்படுத்துவது போலிருக்கிறது, இந்த கதையை நீங்களே உண்டாக்கியிருக்கிரீர்கள், இதில் சில சவால்கள் இருக்கிறது, சில பிரச்சனைகள் இருக்கிறது என்பார்கள். அது எப்படி இருக்கும்?

**Dr. டேரல் பாக்:** ஓகே, சரி, உங்க மீடிங்கோட பெயர், "உயிரோட்டமுள்ள நம்பிக்கையோடிருப்போம்." மரித்த மேசியா இருக்கிறார், மரித்து அடக்கம் பண்ணப்பட்டார், அது மாத்திரமல்ல, கற்பனை கதை என்ற கருத்தின்படி, அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டவராகவே இருப்பார். ஆனால் உயிரோடிருக்கும் இயேசுவை பற்றிய செய்தியையே நாங்கள் சொல்ல விரும்புகிறான். சரி, எளிமையான ஒரு காரியத்தை செய்திருக்கலாம் அதாவது அவரை நீதிநெறிகலை நமக்கு போதித்து ஊக்குவிப்பவர் என்று சொல்லி அவரை திரும்ப அழைக்காமல், அப்படியே அவரை விட்டு விட்டு செய்தியை முடித்திருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படி செய்யாததற்கு காரணம் என்னவென்றால் அப்படி ஒரு விஷயம் அங்கு சம்பவிக்கவில்லை. யோசித்து பாருங்க, இது கற்பனையாக இருந்தால், எதை விசுவாசிக்கும்படி நம்மிடம் சொல்லுகிறார்கள்? நீங்க ஒரு கூட்டத்தில் இருக்கீங்க ஒருவர் தனது கரத்தை உயர்த்தி, "எங்கிட்ட ஒரு யோசனை இருக்கு. உயிர்த்தெழுதல் என்ற ஒன்றை உருவாக்கலாம். அவர் மீண்டும் ஜீவன் பெற்று வரப்போகிறார்.

இந்த கடினமான யோசனையை நாம் விர்க்கப்போகிறோம் – ஏன்னா யூத மக்கள் தொகையின் னிமித்தம் ஜனங்கள் சரீர பிரகாரமான உயிர்த்தெழுதலை சீக்கிரத்தில் நம்ப மாட்டார்கள் – "இந்த யோசனையை வருவிததில் கையாள வேண்டும். அதனால் சாட்சிகளாக முதல்ல நாம நிருத்தப்போகிரவர்கள் கள். அவங்க நடக்கிற காரியங்களை சொல்லி எல்லாரையும் நம்பவைப்பார்கள்." ஒரே பிரட்சனை ஏனன்னா முதல் நூற்றாண்டில் இருந்த கலாசாரத்தில் பெண்களின் சாட்சியங்கள் ஒரு பொருட்டாக எண்ணப்படவில்லை. சட்டத்திற்கு முன்பு அவர்களால் சாட்சி சொல்ல முடியவில்லை, பாலியல் பலாத்காரங்கள் வழக்கு மட்டும் செல்லுபடியாகும். அதனால் இந்த யோசனையை வேறுவிதமாக கையாளவேண்டும், உங்களுக்கு வேண்டுமென்றால் நீங்கள் இதை எடுத்துசொல்ல ஒரு வழக்குரைஞ்சரை ஏற்ப்படுத்த வேண்டும். அதற்கு பிறகு உங்களுடைய யோசனையை வெளிப்படுத்த முதலாவது பெண்களையும் பின்பு உங்கள் உதவியாளரையும் நிறுத்தவேண்டும். வழக்கத்திற்கு மாறானது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, ஒரு காரியத்தை நீங்களே உருவாக்கியிருந்தா ஏன் பேதுருவ முன்னால நிறுத்தக்கூடாது?

**Dr. டேரல் பாக்:** அதுவும் சரிதான். பேதுரு, அல்லது அப்போச்தலர்களில் ஒருவர். நீங்க முன்னால நிறுத்துவதற்கு பலபேர் இருந்தார்கள். இதுல இன்னொரு பிரட்சனையும் இருக்கு, இதுல இருக்கிற பிரச்சனை என்னன்னா மேசியா மரணத்திலிருந்து உயிரோடு எழும்புவார் என்பதற்கு முன்னுதாரணமாக எதுவுமே இல்லை. மேசியா பாடுபடுவார் என்பதை அவர்கள் உண்மையில் நம்பவே இல்லை. அதனால அவங்களுக்கு இந்த விஷயத்தில் எந்த எதிர்ப்பார்ப்பும் இருக்கவில்லை. ஏசாயா 53ரை இந்த கோணத்தில் அவர்கள் வாசித்ததில்லை. அதனால், அதனால முன்னுரைக்கப்படாத காஎஇயத்தை பற்றி விவாதிக்க அவர்களுக்கு மனமில்லை, அதை பொருட்டாக நினைக்கவில்லை. இது மற்றொரு விதமான மக்களுக்கும் பதிலளிப்பதாக இருக்கிறது, “சரி, இயேசு தன்னை மேசியாவாக பிரதிபலிக்கவும் இல்லை தன்னை மேசியாவாக நினைக்கவும் இல்லை. ஆனால் பின்னாட்களில் அவருடைய சீஷர்கள் அவரை மேசியாவாக கருதினர் என்கின்றனர்.” இல்லை, இயேசு செய்த காரியங்கள் அவர்களை இயேசுதான் மேசியா என்று யோசிக்கும் படி தூண்டியிருகிறது. காலியான கல்லறை போன்ற காரியங்கள் அவர் மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை நம்பும்படி செய்திருக்கிறது. மேலும் காலியான கல்லறையை பார்த்த பெண்கள் துவக்கத்திலிருந்தே இந்த காரியத்தில் தொடர்புடையவர்களாக இருக்கின்றனர், ஏன்னா கட்டுக்கதையை உருவாக்க நினைத்திருந்தால் அவர்களை முதன்மையாக வைத்திருக்க மாட்டீர்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரியா சொன்னீங்க. சரி, மாணவர்களுக்கு சில காரியங்களை சொல்லுங்க, இன்னும் சில நிமிடங்களே இருக்கிறது, கிறிஸ்தவத்தில் நாம் செய்கிற காரியங்களை நாம் விசுவாசிப்பதற்கு காரணம் என்னவென்றால் அது சாஸ்திரத்திற்கு இணையாக இருக்கிறதென நினைக்கிறோம், அதுதான் சிறந்த பதில், நம்மிடம் இருக்கும் ஆதாரங்களை விளக்கிட வேண்டும், ஒகே. அது புரிந்துகொள்ள முடியாத சூத்திரம் அல்ல. இதுவரை சொலப்பட்ட அனைத்தும் ஆதாரங்களுக்கு சிறந்த விளக்கத்தை அளிக்கும் வகையில் பொருத்தமாக இருக்கும். இதற்கும் மேல என்ன சொல்வீங்க?

**Dr. டேரல் பாக்:** சரி, இருப்பதிலேஏ இதுதான் சிறந்த விளக்கம் என நினைக்கிறன். இதை நிரூபிக்க சரியான ஆதாரம் சீஹ்சர்களில் உண்டான மாற்றம்தான் என நினைக்கிறேன், பவுலை பற்றி சொன்னால்லும் யாக்கோபு பேதுரு யாருக்கும் இது பொருந்தும். அவர்களிடத்தில் ஒரு திருப்புமுனையை பார்க்க முடியும். சிலுவையில் அறியப்படும் புன்பு பேதுருவாள் தைரியமா நின்று இயேசுவை எனக்கு தெரியும் என்று சொல்ல முடியல. ஆனா சிலுவைக்கு பிறகு பேதுரு தன ஜீவனையும் கொடுப்பதற்கு ஆயத்தமுள்ளவனாக நிற்கிறார். இது, நாம் செல்லும் பாதையை நமக்கு காண்பிக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நாம் பார்த்தவற்று சுருக்கமாக சொல்ல முடியுமா, இயேசுவை பற்றி நாம் பகிர்ந்துகொண்ட அனைத்து தகவல்களும் மாணவர்களுக்கு தைரியத்தை ஏற்படுத்திட உதவியாயிருக்கும், சுவிசேஷத்தின் செய்தியையும் வசனம் எப்படி வந்தது என்பதையும் உயிர்த்தெழுதலை பற்றியும் அறிந்திகொள்ள உதவும்.

**Dr. டேரல் பாக்:** நம்முடைய விவாதம் எதை பற்றி இருக்கிறது என்றால் இறையியலின் கருப்பொருளானது ஆதிமுதலாயிருக்கிறது என்கிறோம். முந்தைய காலத்திலும் இதை பற்றி சொல்லியிருக்கிறார்கள், அந்த சாட்சிகள், உபதேசங்களின் சுருக்கமாகவும், அவர்களுடைய பாடல்கள் மூலமும், மத சடங்குகளின் மூலமும், நடந்த காரியங்களை எழுதப்பட்ட பதிவுகளோடு அந்த நாட்களுக்கே நம்மை அழைத்துசெல்கின்றனர். ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக இருக்கிறது, இயேசுவின் ஊழியங்களும் அப்போஸ்தலர்களின் பிரசங்கங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. அதைதான் நாமும் சொல்லுகிறோம். இது அதாத்தியமான ஒரு விளக்கம். ஆமா, இங்கு சொல்லப்பட்ட காரியங்கள் வெவ்வேறு விதங்களில் இருப்பதை வசனத்தில் பார்க்கிறோம், ஆனால் அதற்கு காரணம் இயேசு செய்த காரியங்களை எல்லா கோணங்களிலும் ஆழமாக எடுத்து சொல்லும்படியாக அப்படி சொல்லப்பட்டிருக்கிறது.

அதனால நம்முடைய கருத்து என்னன்னா சுவிசேஷத்தின் கருபொருளைதான் ஆதிதிருச்சபையினர் முதலாம் நூற்றாண்டில் தேவனுடைய வார்த்தையாக கருதினார்கள். அந்த செய்தியைத்தான் அவர்கள் பிரசங்கித்தனர், அந்த செய்தியானது தேவனிடத்தில் இருந்து வந்த வெளிப்பாடாக இருக்கிறது, நீங்கள் தேவனுடனான உங்கள் உறவை இயேசு கிறிஸ்துவின் மூலம் புதுப்பித்துகொள்ளலாம் என்பதே அந்த செய்தி அவர் உங்களுக்கு மன்னிப்பையும் உங்களால் பெற்றுக்கொள்ள முடியாத ஒன்றையும் உங்களுக்கு கொடுக்கிறார். பாவத்திற்கு மன்னிப்பு மட்டும் கொடுப்பதில்லை, ஆனால் தேவனுடைய ஆவியினாலே நம்முடைய வாழ்வில் நாம் பிதாவோடு நெருங்கும் படி அனுக்கிரகம் அளிக்கிறார், நித்தியமாய் தேவனோடு இணைக்கப்பட்டிருக்க முடியும், அது உங்களுக்கு நித்தய வாழ்க்கையை அளித்திடும். நித்திய வாழ்க்கை என்பது நித்திய காலமாக மாத்திரம் இல்லாமல். நித்திய வாழ்வு தரமானதாகவும் இருக்கிறது. அது நித்தியரிடமிருந்து வருகிறது. நீங்கள் மறுபடியும் அவரோடு ஐக்கியப்பட முடியும், சிருஷ்டியானது எந்த நோக்கத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தில் மறுபடியும் நிற்கமுடியும். தேவனுடைய வார்த்தை என்று ஆதி திருச்சபையினர் சொல்லும் சுவிசேஷத்தின் மையப்பொருள் இதுதான்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆமா, இதை கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு இது மிகவும் முக்கியமானதென்று நினைக்கிறேன், நீங்க கிறிஸ்தவராக இருக்கப்போகிறோம் என்ற முடிவிற்கு வருவது மட்டும் போதுமானதால்ல. இதை நீங்களாகவே செய்திட முடியாது. இது ஒரு ஈவு. உங்கள் வாழ்வில் இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட விதத்தில் செயல்படும் இயேசு கிறிஸ்துவிடம் வருகிறீர்கள். அவர் உங்களை மாற்றிடுவார் உங்கள் பழைய வாழ்க்கை இருந்தது போல இல்லாமல் நீங்கள் புதிய வாழ்க்கையை வாழ உங்களை தகுதிபடுத்திடுவார்.

**Dr. டேரல் பாக்:** சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால் விசுவாசத்தின் மையப்பொருளாக இருப்பது தாழ்மைதான். எனக்கு நானே உதவ முடியாத நிலையில் தேவன் எனக்கு உதவ வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். விசுவாசத்திற்கு அடித்தளமாக இருப்பது தாழ்மைதான். இதற்கு பிறகு அவருக்கு நேர்த்தியாக செவிகொடுக்கும்படியான நல்ல உறைவை ஏற்ப்படுத்திட உதவுகிறது. எனவே

விசுவாசத்தின் அடித்தளம் வெறும் நம்பிக்கை மட்டும் அல்ல, இந்த வார்த்தையை தான் அதிகமாக பயன்படுத்திடுவோம், அதுதான் விசுவாசம் என்றிடுவோம்: நம்பிக்கை வேண்டும். ஆனால் அந்த நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட தாழ்மை இருக்கவேண்டும் பிதாவிற்கு முன்பாக, "என்னுடைய ஆவிக்குரிய வாழ்வை உமது கரங்களில் ஒப்புவிக்கிறேன் என்று சொல்வதாகும்."

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, நேயர்களே நீங்கள், ஒருவேளை 15 வயதுடையவராக இருக்கலாம், அல்லது 25 வயது, அல்லது 50 வயது, அல்லது 80 வயது, வாழ்வின் எந்த கட்டத்தில் நீங்கள் இருந்தாலும் சரி, இயேசு தன்னை பற்றி சொன்னபடியே இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. அவர் உண்மையில் மரணத்திலிருந்து உயிர்த்தார். இப்போது ஜீவிக்கிறார். அவர்தான் இந்த உலகத்தின் இரத்மகர். உங்களை இரட்சிக்கும்படி விரும்புகிறார். உங்கள் வாழ்வில் ஒரு கட்டத்தில் அவரை பற்றி நீங்கள் யோசிக்க வேண்டும், ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும், உங்கள் இரட்சகராக அவரை உங்கள் வாழ்வில் ஏற்றுக்கொள்வீர்களா? உங்களை மாற்றும்படியாகவும் உங்கள் பாவங்களை மன்னிக்கும்படியாகவும் அவரிடம் கேட்ப்பீர்களா? நீங்கதா அதை தீர்மானிக்க வேண்டும். அந்த தீர்மானத்தை இப்போதே எடுப்பீர்கள் என நன்புகிறேன். இந்த உபகரணங்கள் அனைத்தையும் நீங்கள் எப்படி பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறிந்துகொள்ள தொடர்ந்து இணைந்திருங்கள். கவனியுங்கள்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.